**அங்குணகொலபெலெஸ்ஸ பிரதேச சபை**

**அம்பாந்தோட்டை மாவட்டம்**

---------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மே 13 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மே 15 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 செப்தம்பர் 30 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3.2, 1.3.3 மற்றும் 1.3.6 ஆம் பந்திகளில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அங்குணகொலபெலெஸ்ஸ பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்கள் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கீழே காட்டப்பட்டுள்ள கணக்கீட்டு குறைபாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டிற்காகவும் மீளாய்வாண்டிற்காகவும் உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 1,485,994 ஆன வட்டி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குரிய ரூபா 625,000 கிரயத்திலான மோட்டார் வண்டி, தென் மாகாண தலைமை செயலககத்திற்குரிய ரூபா 100,000 கிரயத்திலான ஜீப் வண்டியுடன் கைமாற்றப்பட்டிருந்த போதிலும், உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டுடு கணக்குகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபைக்குச் சொந்தமான 3 காணிகள் மற்றும் 18 மயானங்கள் என்பவற்றின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன், மீளாய்வாண்டிற்காக நிலையான சொத்துக்களுக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 2,010,999 ஆன செலவினம் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 1,164,081 கூட்டுத்தொகையான வருமான மானியம், வாடகைப் பணம், அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் மற்றும் நிர்வாகச் செலவினம் என்பவற்றிற்கான பெறுவனவுகள், மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) முன்னைய ஆண்டிற்கான மோட்டார் வாகனங்கள் மற்றும் வழியில் காசு என்பவற்றைக் காப்புறுதி செய்வதற்காக மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்த ரூபா 228,087 கூட்டுத்தொகையான செலவினம் ஆண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 1.3.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள 09 கணக்கு விடயங்களின் மீதிகள் மற்றும் அவற்றிற்குரிய புத்தகங்கள் மற்றும் பட்டோலைகளில் காண்பிக்கப்படும் மீதிகளுக்கு இடையே ரூபா 3,488,847 ஆன சமனின்மை அவதானிக்கப்பட்டது.

### 1.3.4 பெறவேண்டிய கணக்குகள்

(அ) நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்பட்டு காணப்படும் ரூபா 1,081,369 கூட்டுத்தொகையான தீர்க்கப்படாத 29 முற்பன மீதிகளைத் தீர்வு செய்வதற்கும் மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ‘‘வீட்டுக்கு வீடு கிரா்மத்திற்கு கிராமம்’’ நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முன்னைய ஆண்டின் போது நிறைவேற்றப்பட்ட நிர்மாண வேலைகளுக்காக ரூபா 1,601,093 தொகை மூலதன மானியங்களும் மோட்டார் கிரோடரை வாடகைக்கு வழங்கியதற்காக ரூபா 161,483 ஆன வருமானமும் மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டியிருந்தது.

### 1.3.5 செலுத்த வேண்டிய கணக்குகள்

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 1,601,093 தொகையான நிர்மாண கடன்கொடுத்தோர் மீதிகளும் முன்னைய ஆண்டுகளுக்குரிய உள்ளூராட்சி மன்ற ஓய்வூதிய சம்பள நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 435,506 தொகையான பங்களிப்பு மீதியை தீர்வுசெய்வதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டில் உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்குரிய செலுத்த வேண்டிய ரூபா 407,436 கூட்டுத்தொகையான 2 மாதாந்த தவணைகள் மற்றும் மீளாய்வாண்டிற்குரிய ரூபா 2,444,618 தொகையான தவணைப் பணத்தையும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.6 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

ரூபா 67,215,732 தொகையான கட்டிடங்கள் தொடர்பாக தயாரிக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடும் ரூபா 16,685,214 தொகையான உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்தின் மீதிகளின் உறுதிப்படுத்தல்களும் ரூபா 4,494,130 கூட்டுத்தொகையான 12 காணிகளின் பெறுமதி தொடர்பான உரித்துறுதிகள் / கையளிப்பு கட்டளைகளும், ரூபா 850,773 கூட்டுத்தொகையான பிடிகாசு வைப்புக்கள் தொடர்பான விரிவான பட்டோலைகளும், ரூபா 133,000 கூட்டுத்தொகையான சட்டத்தரணி கட்டணக் கொடுப்பனவுகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் போன்ற தகவல்கள் சமர்ப்பிக்கப்படாததால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக பரீட்சித்து உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

கீழே விபரிக்கப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங் களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2015 மே 21 ஆந் திகதிய 15/நானாவித (051) ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானம் | தொடர்புடைய அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்காத வகையில் அம்பாந்தோட்டை மாவட்டத்தின் உள்ளூராட்சி மன்றங்களின் விளையாட்டு விழாவிற்காக சபை நிதியத்திலிருந்து ரூபா 159,405 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 571(3) | 1993 ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 2,950,915 கூட்டுத்தொகையான காலாவதியான 212 வைப்பு மீதிகளை தீர்வை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டெடும் செலவினத்தை விஞ்சிய மீண்டுடெடும் வருமானம் ரூபா 2,907,705 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,533,118 ஆக இருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 4,440,823 ஆன அதிகரிப்பொன்று தென்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

கீழே காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டு உட்பட மீளாய்வாண்டிலும் சபையின் சுய வருமான உழைப்பு அளவினை விட இரண்டு மடங்கை மிகைத்து மீண்டெடும் செலவினங்களில் அதிகரிப்பொன்று காணப்பட்டது.

(ஆ) வருமான மானியம் கிடைக்கப்பெறாதிருந்தால் சபை வருமானங்களிலிருந்து எந்தவொரு முறையிலும் மீண்டெடும் செலவினத்தை மேவுகை செய்ய முடியாதிருந்ததுடன், அது மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் உறுதிப்படுத்தப்பட்டமை தென்பட்டது.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 ஆதன வரி

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 134(1) ஆம் பிரிவின் பிரகாரம் வீதவரி மதிப்பீடு செய்யப்பட்டு அறவிடுவதற்காக சபையினால் மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.2 வாடகை

சபைக்குரிய கட்டிடங்கள் மற்றும் இயந்திரங்களை வாடகைக்கு வழங்கியதற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 219,866 தொகையை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 159(1) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 அனுமதிப்பத்திரக் கட்டணம்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 149, 150, 151 மற்றும் 152 ஆம் பிரிவுகளின் பிரகாரம் சபையினால் நிர்ணயிக்கப்பட்டதன் பிரகாரம் வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணங்களை அறவிடப்படாமையால் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 253,730 ஆன நிலுவை மீதியொன்று காணப்பட்டது.

### 2.3.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 462,748 தொகையும் முத்திரைக் கட்டணமாக ரூபா 1,227,963 என கிடைக்க வேண்டியிருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல் மதிப்பீடு

சபை அதிகாரப் பிரதேசத்தில் வீதிகளை நிர்மாணிக்கும் செயற்பாடுகளுக்காக மீளாய்வாண்டின் பாதீட்டின் மூலம் ரூபா 2,100,000 ஆன நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், உரிய செயற்பாடுகளுக்காக அந்நிதிஏற்பாட்டைப் பயன்படுத்த முடியாமையால் ஆண்டின் இறுதியில் மொத்த நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தன.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

நடமாடும் நூலக பஸ் வண்டியொன்றைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு அனுசரணையொன்றாக தேசிய லொத்தர் சபையிடமிருந்து ரூபா 100,000 பணத்தை அச்செயற்பாட்டிற்காக பயன்படுத்தாமல் ஊழியர் செயலாற்றல் மதிப்பீட்டு விழாவைவொன்றை நடாத்துவதற்காக செலவிடப்பட்டிருந்தது.

### 3.4 ஒப்பந்த நிர்வாகம்

மீளாய்வாண்டின் போது அலுவலக முன்பக்க வேலியை அமைப்பதற்காகவும் சபை வளவில் வாகனங்களை நிறுத்தும் நிலையமொன்றை நிர்மாணிப்பதற்குரிய நிர்மாண வேலைகள் தொடர்பான பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 3.9.1 ஆம் பந்தியின் பிரகாரம் அரச சார்பற்ற அமைப்புக்களுக்கு நிர்மாண வேலைகள் மாத்திரம் கையளிக்க முடியுமான போதிலும், அதற்கு இணங்காமல் விசேட செயற்பாடொன்றான வெள்ளிரும்பு நுழைவாயிலொன்றையும் மதிற்சுவருக்கு மேல் வெள்ளிரும்பு குழாய் வேலியொன்றையும் அமைப்பதற்காக ரூபா 1,068,772 கூட்டுத்தொகையான செலவினம் செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 5.4.6 ஆம் பந்தியின் பிரகாரம் ஒப்பந்தக்காரரொருவருக்கு செலுத்த வேண்டிய ஒவ்வொரு கொடுப்பனவினதும் குறிப்பான தொகை நிறுத்தி வைக்கப்பட வேண்டிய போதிலும், அதற்கு இணங்காமல் மேற்படி நிர்மாண வேலைகளுக்காக முறையே ரூபா 1,600,000 மற்றும் ரூபா 600,000 தொகை என முழுத் தொகையும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### 3.4 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

**நகர மண்டபத்தை திறந்துவைக்கும் விழாவிற்காக செலவினங்களை மேற்கொள்ளல்**

அனைத்து பிரதேச சபைகளினதும் கிராம அபிவிருத்திக்கான செயற்பாட்டு கைநூலின் 4.15 ஆம் பந்தியின் பிரகாரம் நிர்வாகச் செலவினத்திற்கான பணத்திலிருந்து விழா செலவினம் மேற்கொள்ளக்கூடாத போதிலும், முறையான அங்கீகாரமொன்றில்லாமல் நகர மண்டபத்தை திறந்துவைக்கும் விழாவிற்காக மீளாய்வாண்டின் போது நிர்வாகச் செலவினத்திலிருந்து ரூபா 347,000 செலவிடப்பட்டிருந்தது.

### 3.5 பதவியணியினர் நிர்வாகம்

பதவியணியினர் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட 06 பதவிகளில் 06 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் மேலும் 06 பதவிகளில் மிகை ஊழியர்களின் எண்ணிக்கை 10 ஆக இருந்தது. வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மிகையான பதவிகளை முறைமைப்படுத்துவதற்கும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த 24 செலவின விடயங்ளுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 53,866,000 முழு நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டும் மேலும் 05 செலவின விடயங்களில் ரூபா 29,178,534 கூட்டுத்தொகையான சேமிப்புக்களும் வேறு 03 செலவினங்களில் பாதிடப்பட்ட எல்லையை விஞ்சி ரூபா 2,781,456 செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையும் 02 வருமான விடயங்களில் ரூபா 25,874,241 ஆன அடையப் பெறாத வருமான இலக்கும் காணப்பட்டமை போன்ற காரணங்களால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லையென அவதானிக்கப்பட்டது.

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினைச் செயற்படுத்தல்

2009 யூன் 09 ஆந் திகதி DMA/2009(i) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவொன்று தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

---

**விளைவற்ற சொத்துக்கள்**

---

திருத்தம் செய்து பயன்படுத்தப்படக்கூடிய நிலைமையில் காணப்படும் ரொக்கி ஜீப் வண்டி மற்றும் முச்சக்கர வண்டி என்பன 2014 ஆம் ஆண்டிலிருந்தும் ரூபா 52,400 செலவில் 2013 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த பிரின்டர் அத்திகதியில் இருந்து விளைவற்று காணப்பட்டது.

**4.4 தீர்வு செய்யப்படாத பொறுப்புக்கள்**

---

மீளாய்வாண்டின் இறுதியில் சபையின் தீர்வு செய்யப்படாத மொத்தப் பொறுப்புக்களின் கூட்டுத்தொகை ரூபா 4,617,459 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 2,040,099 தொகையான பொறுப்புக்கள் முன்னைய ஆண்டுகளுக்குரித்தாக இருந்த போதிலும், அம்மீதிகளை தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிர்வாகம்
(ஈ) ஒப்பந்த நிர்வாகம்
(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்